உ

சங்கரநாராயணர் துணை.

கற்பகநாடு சோமகிரிச்சித்தர் விகசித வேலாயுதமூர்த்தி
யவர்களின் வம்சபரம்பரை கடாக்ஷ வித்வான்
தேசாபிமானி,
திருமுருகதாஸரென்ற,
துங்கன் சொக்கணண்டிப் புலவரவர்கள்
இயற்றிய,

# கந்தநாதர் பதிகம்.

## நாராயணப்பதிகம்.

சென்னகரம்பட்டி பஞ்சாயத்துக்கோர்ட்டு பிரஸிடெண்ட்;
S. P. சொக்கணண்டி அம்பலமவர்கள்,
தோடனேரிக் கிராமம் கலிகால தர்மாதிபதி
R. அர்ச்சுனன் சேர்வையவர்கள்
வேண்டுகோட்படி

ஷையூர், T. S. சொக்கணண்டி அம்பலம்,
கிராமமுனசீப்
,, N. V. K. வெள்ளாண்டி அம்பலம்
இவ்விருவர்களின் பொருளுதவியால்,

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்,
கு. இராமசாமிக்கோன்
அவர்களால்,
மதுரை வடக்குமாசிவீதி,
ஸ்ரீராமச்சந்திரவிலாஸம்பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.
1926
ரிஜிஸ்டர் காப்பிரைட். [அணா 1

10 FEB
Q2:417
N26
168638

## சிறப்புப்பாயிரம்.

---

சிங்கம்புணரி வித்வான்,

ஸ்ரீலஸ்ரீ:- மூ. முத்துவடுகுபாத்தியாயரவர்கள் சொல்லி

வெண்பா.

முந்தனத்தன் காணா முடியோ னருளுமயர்
கந்தனத்தன் மீதுபதி கஞ்சொலினான்—செந்தனத்தா
வாச னழகின் மதனன் திருமுருக
தாஸன் உலகுவப்பத் தான்.

---

ஸ்ரீ ல ஸ்ரீ:- கீழச்செவல்புரி,

பண்டித பீமசுப்பராய ஐயரவர்களாலியற்றியது.

வெண்பா.

காதுகையாற் கட்டிழந்த காளையர்க்காய்க் காய்மகளின்
யாதுகையாற் காட்டிப் பயனளித்தான்—மேதகுசீர்
தருமருகன் மீதுபதி கஞ்சொலினான் தாரணியிற்
திருமுருக தாஸனெனுஞ் சேய்.

---

மதுரை தமிழ் வித்வான், மகா-ள-ள-ஸ்ரீ

S. கலியாணசுந்தரம் பிள்ளையவர்களாலியற்றிய

வெண்பா.

வானவர்க்குத் தெள்ளமுதம் மாமுனிவோர்க் கின்பசுகம்
ஆனகவி வாணர்களுக் கானந்தம்—மானிலத்தில்
சீர்முருக தாஸ்வலவன் செப்பியவேள் மால்பதிகம்
நேர்மைநயம் கண்ணோர்தல் நேர்.

---

உ

சங்கரநாராயணர் துணை.

# கந்தநாதர் பதிகம்.

காப்பு வெண்பா.

பூமேவு பல்லுலகு போற்றுகந்த நாதனின்மேல்
தேமே வியபதிகஞ் செப்பவே—மாமேவு
விற்பனவி வேகருள மேலிருந்து நல்லருள்செய்
கற்பக விநாயகன்றாள் காப்பு.

---

நாமகடுதி.

துங்கவடி வேலேந்து சுப்ரமணியர் மீதெழியேன்
பங்கமறப் பதிகம் பாடுறவோர்—செங்கயினிற்
புத்தகந் தரித்தமலர்ப் பொற்கொடிபூந் தாண்மலரென்
சித்தந் தொழுமறவா தே.

---

நூல்.

சீர்கொண்ட நவரத்ன மணிமுடி கொளிக்திசச்
திபர்வாழு நகரை யொத்த
தென்பரங் குன்றிலுறை யோகனே வள்ளியொடு
தெய்வானை மகிழ் லோலனே
பார்கொண்ட பூரணவ கண்டிதா காரமாம்
பரமனே யெண்ணரிய தோர்
பற்பலவி சேடமுந் தலமகிமை யுங்கொண்ட
பரமனே பூங் கடப்பங்
தார்கொண்ட மார்பனே பழமுதிரு சோலைவாய்
தனில்வளரு மான பரனே
தந்தைதா யாவுமா மூந்தியுரை பேரின்ப
சற்ஜன ருவக்கும் வடிவாய்க்
கார்கொண்ட வான்முகடு தழுவுறு செழுந்தரு
களிற்கவிகள் விளையா டுறும்
கருணைபொழி தமிழ்மாலை புகுபரங் குன்றிலுறை
கந்தநா தக் கடவுளே.



OFFICE OF ... 10 FEB 1926 MADRAS

48638

மாயவாழ் வெனும்பஞ்ச பாதகச் செய்கையது
வாரா தெனக்கு வேண்டும்
வம்பான தொடர்பவந் தொலையநின் றுதார
வாழ்க்கையு மெனக்கு வேண்டும்
நேயமிகு பட்டினத் தடிகளொடு பத்ரகிரி
நீதுநிலை வெற்கு வேண்டும்
நித்தியா னந்தமுறு திரிஞான சம்பந்தர்
நிலையது யெனக்கு வேண்டும்
ஆயபணி மாணிக்க வாசகச் சுந்தரர்
அப்பரன் படைய வேண்டும்
அடிமைநா னென்செயினும் நின்றுணைத் தாள்பரவு
அர்ச்சனை யெனக்கு வேண்டும்
காயகற் பந்தேடும் §விகசிதவே லாயுதங்
கருணையு மெனக்கு வேண்டும்
கருணைபொழி தமிழ்மாலை புகுபரங் குன்றிலுறை
கந்தநா தக் கடவுளே. (2)

அனைவர்களு முளமகிழ் கோவிற்குளம் பூங்கா
வமைக்கா திருந்த பாவி
அத்வீத ஞானமுறை சிறிதேனு மென்னுளத்
தடையா திருந்த பாவி
கனகநிகர் மடமாதர் முலைமீது வாஞ்சையாய்க்
கண்வைத திருந்த பாவி
கதியிதென வருள்கின்ற முதியோர்கள் போதனைகள்
கருதா திருந்த பாவி
வனமதுறு மாமைபோல் ஒருநினைவ தாகியு
மகிழா திருந்த பாவி
வம்பென்ற தடமீது மூழ்கியே யயர்கின்ற
வளமையறி யாத பாவி
கனகமியல் தண்டையொடு கிண்கிணி முழங்குநின்
கழலைவேண் டாத பாவி
கருணைபொழி தமிழ்மாலை புகுபரங் குன்றிலுறை
கந்தநா தக் கடவுளே. (3)

மந்திர வுதாரமணி வித்வகுண சீர்செழும்
வாரணிந் திட்ட புயலே

---

§ தமிழரசர்களிலொருவரான சோமகிரி சொக்கணுண்டித் தேவரவர்கள் வம்சாதிபதி. கலிபிறந்த 54ல் வசித்திருந்தவர்.

வாழ்வதனை மெய்யென்ற மூடர்கட் காதார
வளமைக ளுரைத்த புயலே
அந்தர சிருட்டிமுதல் எங்கினும் நிறைந்திலகு
மையனு நின்ற புயலே
அஞ்செழுத் தக்ஷரத் தொருவகையு மறியாத
அடிமைக் குகந்த புயலே
சுந்தர மிகுந்தவடி வானபர தெய்வமே
சுருதிக ளறிந்த புயலே
சொந்தநா னென்பதுன் ஞாபகத் தேகொண்டு
சுபசோப னஞ்செய் புயலே
கந்தரந் தொடுகமுகு சந்தனம் பொலிகின்ற
கழனிவள மிக்க புயலே
கருணைபொழி தமிழ்மாலை புகுபரங் குன்றிலுறை
கந்தநா தக் கடவுளே. (4)

போதித்த குருதூரிய மெனதிதைய மதிலூறு
புலமைக ளமைத்த மணியே
போற்றிப் பணிந்திடகல் விஷயவறி வூட்டிடும்
பொருளா யமைந்த மணியே
வாதித்த சமணருற வாகமம் புவிமீது
வளரா தவித்த மணியே
வழியான மாய்கையுறு சுழல்காற்றி லணுகாத
வளமே செழித்த மணியே
சோதியோ டருள்புரிகி டாக்ஷமே விகசிதத்
தோன்றலாய் வந்த மணியே
துய்யமணி விர்த்திபெறு முக்தனுய் வியாத
சுத்தசை தன்ய மணியே
காதிற்கு மமுதகரு ணாகரச் செந்தமிழ்க்
கலைகளி லுயர்ந்த மணியே
கருணைபொழி தமிழ்மாலை புகுபரங் குன்றிலுறை
கந்தநா தக் கடவுளே. (5)

அடலசுரர் தன்கொடிய செயல்களை யகற்றிடற்
கறிவுட னமைந்த கதிரே
அனுபவ சிரேஷ்டமாம் பூரண கடாக்ஷமுறும்
அந்தமாய் நின்ற கதிரே
விடலைகள் படுந்துயர் தனைக்கொய்துன் னிருதாள்
விளைத்தருள வந்த கதிரே

விச்சித்திர வேடிச்சி கண்டுள மயங்குமா
வெளிவந் துவந்த கதிரே
கடனசபா தேவர்தொழு குன்றுதோ றுடன்மிகு
நாதவே தாந்த கதிரே
நண்பனுள மங்கிடா திங்குனருள் வேதமுறை
நல்கவந் துற்ற கதிரே
கட்களி றெனுந்தேவ னுக்கிளைய தேவனே
கருணைக ளமைந்த கதிரே
கருணைபொழி தமிழ்மாலை புகுபரங் குன்றிலுறை
கந்தநா தக் கடவுளே. (6)

இலவவி தழ்க உளமங்கை மார்மோ கத்துள்
இணைந்ததை நினைந் தழுவனே
எதிர்கொண்டு நினதுடைய பாதார விந்தமே
எங்கென நினைந் தழுவனே
கொலைசெயுஞ் சண்டாள பாவரா னவருறவு
கொண்டதை நினைந் தழுவனே
குருவடியை மறவாத தாயுமா னார்மனக்
கொள்கையை நினைந் தழுவனே
பலிகொள்சிறு வயதுளவ ருறவதனை நம்பிடும்
பான்மையை நினைந் தழுவனே
பறபலசு ஜாதியென் றெப்பிலுரை செய்குமென்
பாமரம் நினைந் தழுவனே
கலைகண்மிகு வித்வகுண சிங்கமே நின்னருட்
காக்ஷியை நினைந் தழுவனே
கருணைபொழி தமிழ்மாலை புகுபரங் குன்றிலுறை
கந்தநா தக் கடவுளே. (7)

மாயகா ரியமித்தை சொற்பன சுழுத்தியொடு
வருபாவ கண்ட முகிலே
வாஞ்சைமிகு செல்வசீ ராதிநெடு நாளினில்
வந்தவ தரித்த முகிலே
தீயகா ரியசெய்கை எனதுளமீ தேறிடாச்
சேர்வைக ளுகந்த முகிலே
திங்களொளி தங்கிடும் மங்களவி சேடமுரு
செய்கையி லனந்த முகிலே
வாயமுது செந்தமி ழருணகிரி யோதுநல
வையக நிறைந்த முகிலே

வரமணியும் வேதமுறை இதிகாச வாகமம்
வாழ்விற் குகந்த முகிலே
காயமது பொய்யென்ற முதுமொழி யறிந்திடும்
கற்பக விசேட முகிலே
கருணைபொழி தமிழ்மாலை புகுபரங் குன்றிலுறை (8)
கந்தநா தக் கடவுளே.

சொரூபகா ரணவிர்த்தி சங்கற்ப வறிவிற்குத்
துணையா யிருந்த வடிவே
சுத்தமுள ரத்னமணி யாவினொளி யாய்வந்து
சுருதிக ளறிந்த வடிவே
நிரூபணவி டாதசதா நிஷ்டையிற் பூண்டிடும்
நெஞ்சிலுறை கின்ற வடிவே
நிர்மலசை தன்யமே பலபலவி சாரணை
நெடிலுறவ மைந்த வடிவே
தராதர மஹத்துவ விநோதவகை பாவினுந்
தகைபொடு நிறைந்த வடிவே
சத்தியமே யெவ்விடத் தும்பரவ நின்றிம்பர்
சந்ததம் நிறைந்த வடிவே
கரால்மௌன சகசசௌ பாக்யமே வேதாந்த
கற்பக நிறைந்த வடிவே
கருணைபொழி தமிழ்மாலை புகுபரங் குன்றிலுறை (9)
கந்தநா தக் கடவுளே.

முப்புவி விசாரணை துவக்கிடு பராபரன்
முத்தொழி னடாத்து மந்த்ரம்
மூச்சுடர் தனக்குநிகர் ஒப்பிடு சகத்பரவு
முக்கண தமைந்த மந்த்ரம்
அற்புதங் கொண்முறைமை விகசிதவே லாயுதம்
அகத்தினி லுவந்த மந்த்ரம்
ஆசுசித் திரமதுர வித்தார வாலையருள்
ஆக்கிய கடாக்ஷ மந்த்ரம்
சொற்பொரு ளிலக்கணத் திருமுருக தாசனின்
றுதிப்பிற் கமைந்த மந்த்ரம்
சுருதிமறை தேடிடும் பெரியவர்க் கருள்தரத்
தோன்றிவெளி யாகு மந்த்ரம்
கற்பக விசேடமுறு சத்துசித் தானந்த
காக்ஷியிக் கியைந்த மந்த்ரம்
கருணைபொழி தமிழ்மாலை புகுபரங் குன்றிலுறை (10)
கந்தநா தக் கடவுளே.

ஸ்ரீராமஜெயம்,

## பழமுதிருஞ் சோலைமலை

# நாராயணப் பதிகம்.

விநாயகர் துதி.

போதமுறு மாதவத்தோர் போற்றுதிரு நாரணன்மேற்
காதலொடு நற்பதிகங் கட்டுரைக்கத்—தாதையன
குஞ்சரவெண் மாமருப்புக் கொண்டமுகத் தைங்கரனின்
கஞ்சமலர்த் தாடுணையே காப்பு.

நூல்.

தொழவருளும் பழம்பொருளே சருவ ஞானச்
சுயமணியே திமிதமிடுங் கடலி னோர்பாற்
றழன்மெழுகா யுருகுமனத் தெளியேன் பெற்ற
தமனியமே வுயர்மறையின் றமிழே துங்கக்
கழலிணையே மலியமுத முண்ட தேவர்
கருணைபெறத் துறவுகொளுங் களியா னந்தப்
பழமுதிர்சோ லையில்வளரு முகிலே பொற்பூர்
பரந்தாம நாரணநின் பதமே போற்றி. (1)

பாசிழைகள் பரவுருப மாதர் தங்கள்
பனிமொழியா லினிவிதெனப் பயிலு மோகத்
தேசுதரு மெனக்கலவி புரியு மூடச்
சென்மமுனம் பவத்திறளோ தெருளேன் றட்டத்
தாசனுகா தெனக்கருளும் பரமா னந்தத்
துவரிதழா ளிலக்குமியைத் தோளி லேற்றிப்
பாசுயரும் பழமுதிர்சோ லையினில் வாழும்
பரந்தாம நாரணநின் பதமே போற்றி. (2)

கன்னலமு தினையமொழி மடவார் தன்னைக்
கலவிதனி லுவகைகொளக் கருத்தி லுற்ற
வென்னையுமின் மினிகதிர்முன் படைத்தா யந்தோ
யேழையேற் கருள்செயுமுன் னிலங்கை வாழுங்

துன்னலரை வெற்றிகொளும் மணியே நின்றன்
தொழும் புதங்கள் சொக்கனுணடி துயரமாற்றிப்
பன்னகஞ்சேர் பழமுதிர்சோலையினில் வாழும்
பரந்தாம நாரணநின் பதமே போற்றி: (3)

அரக்கர்குழா முளையவரு தோதண் டங்கொண்
டலரிணரு துளபதயா வாதி தேவர்க்
கிரக்கமுடன் சுவையமுத மூவகை கூர
வெழுவாவை மகமுனிவ ரிறைஞ்சிக் கூப்பக்
கரக்குமிறை வம்புலியான் மகவென் றேன்றிக்
காதலுறு மணித்தடந்தோட் கருடன் பூவிற்
பரக்கவரும் பழமுதிர்சோலையினில் வாழும்
பரந்தாம நாரணநின் பதமே போற்றி. (4)

தெரியலணி மடவர்களி னுதிர மொன்றாய்த்
திரண்டுவந்து முனதடியான் சிறிது கோட்டா
தரிவை யர்கள் மயலதனில் மூழ்கவூழி
அயன்கரமோ எழுதினதை யறியே னென்னைப்
பரவுநளிர் பெருவினையைப் பருகுங் கோவே
பகரறிய மறைநான்கும் பணியுந் தேவே
பரவிமைக்கும் பழமுதிர்சோலையினில் வாழும்
பரந்தாம நாரணநின் பதமே போற்றி. (5)

லங்கையனு மிடையமல்குப் பாட்டை யாண்டு
நாடுமனு மானவணி னடத்தை கூற
வங்கையுள செருநர்களு முடைகு சுண்ண
மாமதுவென் றவவிரதர் வாசி தூவப்
பொங்கமுள தனதிருளை யூடல் கூடிப்
புரவலனுய்ப் படியின்மிசை புகழு மோங்கப்
பங்கமுறுப் பழமுதிர்சோலையின்மேல் வாழும்
பரந்தாம நாரணநின் பதமே போற்றி. (6)

முற்றுரா நுண்ணிலங் கவுறு கருணைவாழ்வே
முகிழவிழ மருகதிரோ முதலாய் மிக்கோ
யொற்றவனு யுலகவனு யொருசே யாகி
யுவகைதட வர்நிதியா யுவசாய் நின்றன்

பற்றுவரி னையபர கதியா முத்திப்
பதுமநற வுயிர்ப்பவரு பரனே வுன்றன்
பற்றுடைய வடியர்களின் பவத்தை நீக்கும்
பரந்தாம நாரணனின் பதமே போற்றி. (7)

சுககனக மலர்விரியத் தேனு மார்ப்பத்
துயிலில்மறை முதியவர்க டுயரந் தீரக்
ககனவெளி மழைவின்மனுங் கவரும் யோகக்
கணமுடையா வன்றுதிருக் காளை தொண்டன்
அகமதனி லுலவுவனப் புயரும் வாழ்வே
அனையநறு மிருகளப வணியுங் கோடி
பகல்விரியும் பழமுதிர்சோலையின்மேல் வாழும்
பரந்தாம நாரணனின் பதமே போற்றி. (8)

மைகளிட்டு வளைகளிட்டு வரிக்கண் காட்டி
வாரிதிசூழ் புவனமிசை வணங்கி யென்முன்
சைகைபண்ணு மிளமகளிற் கென்சொல் வேனுன்
தயவுசெயு முமதடியைத் தமியன் வாழ்த்த
மெய்புகட்டுங் குருமணியே வருளா னந்த
விதரனையே பழமையிலுன் நடன நாகங்
பைதிகட்டும் பழமுதிர்சோலையின்மேல் வாழும்
பரந்தாம நாரணனின் பதமே போற்றி. (9)

ஈங்குரவு கொலைகளவு பொய்கட் காம
மிதனையகற் றுனதடியென் னிதயத் தேற்றி
வாங்குலவு புலவர்களு மகிழும் ஞான
வடிவனென் முகில்வணனின் னருள்செய் தாள்வாய்
சேங்கமரு மிருநிதியும் புகரிலாது
செழித்துவருங் கரமணியா செழிய தாம்பண்
பாங்கமரும் பழமுதிர்சோலையின்மேல் வாழும்
பரந்தாம நாரணனின் பதமே போற்றி. (10)

சுபம். சுபம். சுபம்.

முற்றிற்று.

148638

# விளம்பரம்.

## இராமதேவரென்ற யாகோபு அவர்கள் திருவாய்மலர்ந் தருளிய வைத்திய வாத சாஸ்திரங்களின் விபரம்.

1 யாகோபு வைத்திய சிந்தாமணி ... ... 700
2 ஷை சூஸ்திரம் 50
3 ஷை லோக செந்தூரம் 300
4 ஷை செந்தூர சூஸ்திரம் 155
5 ஷை செந்தூர சூஸ்திரச் சுருக்கம் ... 55
6 ஷை சுண்ணக் காண்டம் 600
7 ஷை சுண்ணம் ... 300
8 ஷை சுண்ண சூஸ்திரம் 15
9 ஷை சுண்ண சூஸ்திரச் 55
10 ஷை வாதக்களங்கு 30
11 ஷை பஞ்சமித்திரம் 30
12 ஷை வாத வைத்தியம் 40
13 ஷை வைத்தியம் ... 30
14 ஷை வைத்தியசூஸ்திரம் 5
15 ஷை தண்டகம் ... 1
16 ஷை இடைபாகம்
17 ஷை செய்பாகம்

ஷை சாஸ்திரம் 17-க்கும்
லாடம்அரும்பதவுரையும்ஆ
புத்தகமாக அச்சிட்டிருக்கி
மொத்தமாய் வாங்குபவர்களுக்கு ரூ 7-0-0 வீதம்கொடுக்கப்ப

இந்த அரிய சாஸ்திரங்களை வைத்தியவாத வல்ல நிபுணர் ஒவ்வொருவரும் வாங்கிவாசித்துக் கைபாக செய்பாக எடை முறைகளைக்கண்டு நன்கு தெளிந்து ஔடதங்களைச்செய்து ... துப் பிரயோகஞ் செய்வீர்களெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்

## இராமதேவர் திருவாய்மலர்ந்தருளிய வைத்தியவா சாஸ்திரங்களின் விபரம்.

1 இராமதேவர் வைத்தியம் 1000
2 ஷையார் ஜாலம் ... 800
3 ஷையார் நிகண்டு ... 500
4 ஷையார் கருக்கடை... 500
5 ஷை குருநூல் பரிபாஷை 300
6 ஷையார் சிவயோகம் ... 200
7 ஷையார் தண்டகம்... 110
8 ஷையார் தண்டகபட்சணி 109
9 ஷையார் பரஞானகேசரி 100
10 ஷை வைத்திய சூஸ்திரம் 83
11 ராமதேவர் சாக்குவை
12 ஷை அஷ்டாங்கயோகம்
13 ஷை பூப்புசூஸ்திரம்...
14 ஷை பரிபாஷைசூஸ்திரம்
15 ஷையார் ஞானதிறவு
16 ஷை குருநூல் சூஸ்திரம்
17 ஷையார் பூஜாவிதி ...
18 ஷையார் ஞானம் ...
19 ஷையார் பரிபாஷை ...
20 ஷையார் வைத்தியம் ...

இந்த சாஸ்திரங்கள் என்னிடமிருக்கு ஓலை யேட்டுப் பிரதி யின்படி அச்சிட்டுக்கொண்டு வருகிறேன் கூடியசீக்கிரம்வெளிவரு

எமது புஸ்தகஷாப்பில் இன்னும் வேண்டிய புத்தகதினுசுக தயாரிலிருக்கிறது. வேண்டியவர்கள் நேரிலும் வீ. பி. மூலமாயு கிரயத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

☞ கு. இராமசாமிக் கோன்,
புஸ்தகஷாப், புதுமண்டபம் மதுரை.